## மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக வாக்கு சேகரிப்பு!

# ஆளுநரை வைத்தே புதுச்சேரியை, பா.ஜ.க. ஆள நினைக்கிறது: புதுச்சேரி மக்கள் தி.மு.கழகக் கூட்டணிக்கே வாக்களிக்க வேண்டும்!

### புதுவையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பரப்புரை!





புதுச்சேரி,ஏப்.9-

**புதுச்சேரி மாநிலம், வில்லியனூர், முதலியார்பேட்டை, உப்பளம், பாகூர், மங்கலம், திருபுவனை ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்கான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வேட்பாளர்களுக்கு ஆதரவாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளரும் தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், புதுச்சேரி முதலியார்பேட்டையில் மரப்பாலம் அருகே, வாக்குகள் சேகரித்துப் பிரச்சாரம் மேற்கொண்டார்.**

**அப்போது அவர், ``புதுச்சேரியில், இப்போது ஆளுநர் கையில்தான் எல்லா அதிகாரங்களும் குவிந்து கிடக்கின்றன. மாநில அந்தஸ்து கிடைத்தால், ஆளுநருக்கு அந்த அதிகாரம் இல்லாமல் போய்விடும். ஆளுநரை வைத்தே புதுச்சேரியை ஆண்டுவிடலாம் என்று ஒன்றிய பா.ஜ.க. நினைக்கிறது. ஆகவே, புதுச்சேரி மக்கள் தி.மு.கழகக் கூட்டணிக்கே வாக்களிக்க வேண்டும்" என்று குறிப்பிட்டார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

முதலில் அனைவருக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து ஆறு நாட்களாக தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலுக்கான தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டு வருகிறேன்.

### கூட்டணி வெற்றி உறுதி

உங்களின் எழுச்சியைப் பார்க்கும் போது, எப்படி தமிழ்நாட்டில் தி.மு.க தலைமையிலான கூட்டணியின் வெற்றி உறுதியோ, அதே மாதிரி பாண்டிச்சேரியிலும் நம் கூட்டணி வெற்றி உறுதி என்று தெரிகிறது.

இந்தப் புதுச்சேரி மக்கள் அனைவரும், `நம் புதுச்சேரி எப்போதுமே வெறுப்பு அரசியலுக்கு இடம் கொடுக்காது' என்று அறிவார்கள். நம் புதுச்சேரி மண் அன்பான மண். அப்படிப்பட்ட புதுச்சேரியில் இன்று பாசிச பா.ஜ.க. சக்திகளின் ஊடுருவல் அதிகமாகிவிட்டது. பா.ஜ.க.-வின் மக்கள் விரோதத் திட்டங்களையெல்லாம் சோதித்துப் பார்க்கும் இடமாக, இன்று புதுச்சேரியைப் பா.ஜ.க. மாற்றிக்கொண்டிருக்கிறது.

### புதிய கல்விக் கொள்கை

பா.ஜ.க.-வின் கொள்கையான புதிய கல்விக் கொள்கையை இன்று புதுச்சேரியில் அமல்படுத்திவிட்டார்கள். புதிய கல்விக் கொள்கை மூலமாக குலக்கல்வித் திட்டத்தை மீண்டும் பா.ஜ.க. புதுச்சேரிக்குள் அமல்படுத்திவிட்டது. நம் வருங்கால இளம் தலைமுறையின் எதிர்காலத்தைக் கெடுக்கின்ற திட்டங்களையெல்லாம் ஒவ்வொன்றாகப் புதுச்சேரியில் நிறைவேற்றி வருகிறார்கள்.

ஆனால், பா.ஜ.க.-வின் எந்தச் சதித்திட்டத்தையும் தமிழ்நாட்டுக்குள் நுழைய விடாமல் தடுப்பவர், நம் முதலமைச்சர், நம் கழகத் தலைவர் அவர்கள். இந்த முறை நாம் நிரூபித்துக் காட்ட வேண்டும்.

புதுச்சேரி மண் சுயமரியாதையோடு இருக்கக்கூடிய மண் என்பதை இந்தத் தேர்தலிலே நீங்கள் நிரூபித்துக் காட்டுங்கள். மாநில அரசும், ஒன்றிய அரசும் ஒன்றாக இருந்தால், ஒரே கூட்டணியாக இருந்தால் வளர்ச்சி அதிகமாக இருக்கும் என்று மோடி சொல்கிறார். இன்னொன்று `இரட்டை இயந்திர அரசு' என்று சொல்கிறார். இந்த இரட்டை இயந்திர அரசினால் இன்று புதுச்சேரியில் ஏதேனும் வளர்ச்சித் திட்டம் வந்திருக்கிறதா? புதுச்சேரிக்கான ஏதேனும் உரிமைகள் கிடைத்திருக்கின்றனவா? ஆனால் `திராவிட மாடல்' என்கிற அந்த ஒற்றைஇயந்திரம் மூலம் இன்று நம் முதலமைச்சர் தமிழ்நாட்டில் முதல்முறையாக இரட்டை இலக்க வளர்ச்சியை, 11.19 சதவிகித வளர்ச்சியை நாம் தமிழ்நாட்டில் கொடுத்துள்ளோம். தமிழ்நாட்டில் எப்படி அ.தி.மு.க. தோளில் ஏறி நின்று பா.ஜ.க சவாரி செய்துகொண்டிருக்கிறதோ, அதே மாதிரி இங்கே புதுச்சேரியில் என்.ஆர்.காங்கிரஸின் தோளில் ஏறி இங்கே பா.ஜ.க. சவாரி செய்துகொண்டிருக்கிறது.

### 16 முறை தீர்மானம்

உண்மையிலேயே புதுச்சேரி மக்கள் மீது ஒன்றிய அரசுக்கு அக்கறை இருந்தால், புதுச்சேரி மக்களுக்கான இந்த மாநில மக்களுடைய நீண்ட காலக் கோரிக்கையான `மாநில அந்தஸ்து' வழங்கியிருக்க வேண்டாமா? கிட்டத்தட்ட 16 முறை தீர்மானம் நிறைவேற்றியும் இதை அவர்கள் செய்யவில்லை. மோடியால் செய்ய முடியாது என்பதல்ல, மோடிக்குச் செய்வதற்கு மனம் இல்லை. ஏனென்றால், புதுச்சேரியை, தமிழ்நாடு மாதிரி அவர்களும் கட்டுப்பாட்டில் எடுத்துக்கொள்ள வேண்டும். தமிழ்நாட்டில் எப்படி எடப்பாடி பழனிசாமி மூலம் முயற்சி செய்கிறார்களோ, அதே மாதிரி புதுச்சேரியையும் தங்களின் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று பா.ஜ.க. நினைக்கிறது.

புதுச்சேரியில், இப்போது ஆளுநர் கையில்தான் எல்லா அதிகாரங்களும் குவிந்து கிடக்கின்றன. மாநில அந்தஸ்து கிடைத்தால், ஆளுநருக்கு அந்த அதிகாரம் இல்லாமல் போய்விடும். ஆளுநரை வைத்தே புதுச்சேரியை ஆண்டுவிடலாம் என்று ஒன்றிய பா.ஜ.க. நினைக்கிறது. ஆகவே, புதுச்சேரி மக்கள் தி.மு.கழகக் கூட்டணிக்கே வாக்களிக்க வேண்டும்

### ஆளுநரின் தலையீடு

சட்டமன்றத்திலிருந்து எதிர்க்கட்சி வெளிநடப்பு செய்து பார்த்திருப்பீர்கள், ஆனால், முதல் முறையாக தமிழ்நாட்டில்தான் சட்டசபையிலிருந்து ஆளுநரே வெளிநடப்பு செய்துவிட்டு சென்றார். புதுச்சேரியில் இன்று எல்லா விஷயங்களிலும் ஆளுநரின் தலையீடு இருக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு இங்கே மதிப்பில்லை.

ஒன்றிய அரசு நியமித்த ஆளுநர்தான் இங்கே எல்லாவற்றையும் தீர்மானித்துக் கொண்டிருக்கிறார். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால் புதுச்சேரியைத் டெல்லியிலிருந்து ஆள வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். இந்த நிலையை மாற்ற வேண்டுமென்றால் நீங்கள் அனைவரும் ஆதரிக்க வேண்டிய கூட்டணி தி.மு.க, காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள் கூட்டணி.

அதே மாதிரி, இங்கே இருக்கக்கூடிய புதுச்சேரிப் பல்கலைக்கழகத்தில் இந்த மாநில மாணவர்களுக்கு 25 சதவிகித இட ஒதுக்கீடு கேட்டுக்கொண்டிருக்கிறோம், அதையும் தருவதற்கு ஒன்றிய அரசு மறுக்கிறது.

### ஊழல் குற்றச்சாட்டுகள்

புதுச்சேரியில் என்.டி.ஏ. கூட்டணி அரசு மீது எவ்வளவு ஊழல் குற்றச்சாட்டுகள் உள்ளன என்பது உங்களுக்கே தெரியும். பொதுப்பணித்துறை ஒப்பந்தங்களில் ஊழல், மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கியதில் ஊழல், பொலிவுறு நகரம் (ஸ்மார்ட் சிட்டி) திட்டத்தில் ஊழல் என எல்லாத் துறைகளிலும் இன்று புதுச்சேரியில் ஊழல் நிறைந்திருக்கிறது. வரும் தேர்தலில், தமிழ்நாடு எப்படி என்.டி.ஏ. கூட்டணியை விரட்டியடிக்கத் தயாராக இருக்கிறதோ, அதேமாதிரி புதுச்சேரியிலும் நீங்கள் என்.டி.ஏ கூட்டணியை விரட்டியடிக்க வேண்டிய நேரம் இந்தச் சட்டமன்றத் தேர்தல்.

நாளை மறுநாள் தேர்தல், பா.ஜ.க-வின் ஆணவத்துக்கு முடிவு கட்டும் தேர்தல்; அதை மறந்துவிடாதீர்கள். எனவே, நமது தி.மு.க, காங்கிரஸ், விடுதலைச்சிறுத்தைகள் கூட்டணி வேட்பாளர்களுக்கு உதயசூரியன் சின்னத்திலும், நம் கூட்டணிக் கட்சிச் சின்னங்களிலும் வாக்களித்து மிகப்பெரிய வெற்றியைப் பெற வைக்க வேண்டும் என்று உங்களையெல்லாம் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

புதுச்சேரியில் இருக்கக்கூடிய 30 தொகுதிகளிலும் நம் கூட்டணி வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்யுங்கள். உங்கள் பகுதியில் இருக்கக்கூடிய கோரிக்கைகளையெல்லாம் நிச்சயம் நிறைவேற்ற, உங்களின் வேட்பாளர்கள் சட்டமன்ற உறுப்பினராகி உங்களுக்காகக் குரல் கொடுப்பார்கள், உங்களுக்கான திட்டங்களைக் கொண்டு வருவார்கள்.

### வாக்குறுதிகள் பல

இங்கே பல்வேறு வாக்குறுதிகளையும் நாம் கொடுத்திருக்கிறோம், அதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன்:

புதுச்சேரி அரசுப் பணியாளர் தேர்வாணையம் உருவாக்கப்பட்டு, ஆட்சி அமைந்த ஒரே ஆண்டில் 10,000 அரசுப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்று வாக்குறுதி அளித்துள்ளோம்.

வேலையில்லாத இளைஞர்களுக்கு மாதந்தோறும் 2,000 ரூபாய் ஊக்கத் தொகை மற்றும் உதவித்தொகை வழங்கப்படும்.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் 20 லட்சம் ரூபாய் மதிப்பிலான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் வழங்கப்படும்.

### தாயுமானவர் திட்டம்

தமிழ்நாட்டில் இருப்பது போன்றே 'தாயுமானவர்' திட்டம் அறிமுகப்படுத்தப் படும். அதாவது, புதுச்சேரியிலும் மூத்த குடிமக்கள் இனி, வெயிலில் ரேஷன் கடைக்கு வரத் தேவையில்லை; அவர்களின் ரேஷன் பொருட்கள் வீட்டிற்கே வந்து சேரும்.

### புதிய தொழிற்சாலைகள் தொடக்கம்

புதுச்சேரியில் புதிய தொழிற்சாலைகள் தொடங்கப்படும். ஏ.எஃப்.டி, சுதேசி, பாரதி பஞ்சாலைகள் மீண்டும் திறக்கப்பட்டு, அவை நவீனப்படுத்தப் பட்டு ஜவுளிப் பூங்கா தொடங்கப்படும்.

என்.ஆர் காங்கிரஸ் - பா.ஜ.க- கூட்டணி அரசால் மூடப்பட்டுள்ள கூட்டுறவு ஆலை, நூற்பாலை, பாப்ஸ்கோ, பாண்டெக்ஸ், அமுதசுரபி போன்ற நிறுவனங்களுக்குப் புத்துயிர் அளித்து, அவை திறக்கப்பட்டு நவீனமயமாக்கப் படும்.

மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்து திட்டம் (விடியல் பயணம்) அறிமுகப்படுத் தப்படும்.

போக்குவரத்து நெரிசலைக் குறைக்கப் புதிய மேம்பாலங்கள் கட்டித் தரப்படும்.

தமிழ்நாட்டைப் போலவே புதுச்சேரியிலும் மும்மொழிக் கொள்கை கிடையாது, இருமொழிக் கொள்கைதான் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) அமல்படுத் தப்படும்.

மாணவர்களுக்கு ஊக்கத்தொகையோடு திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்படும்.

தமிழ்நாட்டில் இருப்பதைப் போன்றே புதுச்சேரியிலும் விளையாட்டுத் துறை மேம்படுத்தப்படும்.

கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக நிறுத்தப்பட்டுள்ள வீட்டு மனைப் பட்டா வழங்கும் திட்டம் மீண்டும் செயல்படுத் தப்படும்.

தொடக்க வேளாண் கூட்டுறவுச் சங்கங்கள் புனரமைக்கப்பட்டு மானியத்துடன் கடன் உதவி வழங்கப்படும்.

இப்படிப் பல்வேறு வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கிறோம். இந்த வாக்குறுதிகளையெல்லாம் நிறைவேற்ற வேண்டுமென்றால், வரும் 9-ஆம் தேதி சட்டமன்றத் தேர்தலில் நம் கூட்டணிக் கட்சி வேட்பாளர்கள் அனைவருக்கும் மிகப்பெரிய வெற்றியை நீங்கள் தேடி தாருங்கள் என்று உங்களையெல்லாம் அன்போடு கேட்கிறேன், பண்போடு கேட்கிறேன், பாசத்தோடு கேட்கிறேன், உரிமையோடு கேட்கிறேன். உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து கேட்கிறேன். இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டுமென்றால் தலைவரின் மகனாக இருந்து கேட்கிறேன், முத்தமிழறிஞர் கலைஞரின் பேரனாக இருந்து கேட்கிறேன். உதயசூரியன் சின்னத்துக்கு வாக்களித்து மிகப்பெரிய வெற்றியை இந்த முறை தமிழ்நாடு மட்டுமன்றிப் புதுச்சேரியும் சேர்த்து தி.மு.க. கூட்டணி வென்றது என்கிற சாதனையைப் படைப்போம்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

மாநிலத் தேர்தல் பொறுப்பாளர் ஜெகத்ரட்சகன், வேட்பாளர்கள் இரா.சிவா (வில்லியனூர்), எஸ்.எஸ்.ரங்கன் (மங்கலம்), பி.அங்காளன் (திருபுவனை), லீ.சம்பத் (முதலியார்பேட்டை), வி.அனிபால் கென்னடி (உப்பளம்), ஆர்.ஆர்.செந்தில்குமார் (பாகூர்), அவைத் தலைவர் சிவக்குமார், கூட்டணிக் கட்சிகளான விடுதலைச் சிறுத்தைகள், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ் பேரியக்கம், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மனிதநேய மக்கள் கட்சி, திராவிடர் கழகம், எஸ்.டி.பி.ஐ, மக்கள் நீதி மய்யம் கட்சி நிர்வாகிகள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மூர்த்தி, நந்தா சரவணன், கழகச் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதிச் செயலாளர்கள், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டாக்டர் நிதீஷ், அகிலன், தமிழ் முகிலன், இளைஞர் அணி உள்ளிட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.

இதைத் தொடர்ந்து கழக இளைஞர அணிச் செயலாளரும் துணை முதலமைச் சருமான உதயநிதி ஸ்டாலின் புதுச்சேரி அண்ணா சிலை அருகே நெல்லித்தோப்பு, உருளையான்பேட்டை, காலாப்பட்டு, கதிர்காமம், ராஜ்பவன் ஆகிய தொகுதிகளைச் சேர்ந்த மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வேட்பாளர்களுக்கு வாக்கு சேகரித்து பிரச்சாரம் மேற்கொண்டார்.



ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆலந்தூர் வடக்கு – தெற்கு பகுதியில் உள்ள 160, 161, 162 ஆகிய வட்டங்களில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆலந்தூர் தொகுதி தி.மு.க. வெற்றி வேட்பாளர் தா.மோ.அன்பரசனை ஆதரித்து ஜீப் மூலம் வீதி வீதியாகச் சென்று உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தார். அருகில் மண்டலக் குழுத் தலைவர் என். சந்திரன், ஆலந்தூர் வடக்கு பகுதி செயலாளர் ப.குணாளன், கழக அணிகளின் நிர்வாகிகள் அ. தமிழ்மாறன், சாய் ஜெயகாந்த் பாரதி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், வட்டச் செயலாளர்கள் கே.பி. முரளிகிருஷ்ணன், ஜெ.ஜெகதீஸ்வரன், எம்.ஆர். சீனிவாசன், டி.ஆர்.சரவணன், சாலமன் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



காங்கேயம் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின், தி.மு.கழக வேட்பாளர் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நாச்சிமுத்து கவுண்டர் திருமண மண்டபம், நகரப்பேருந்து நிலையம், தொட்டியபட்டி, முஸ்லீம் வீதி (அங்கப்பன் மளிகை), ராஜீவ்நகர், பெருமாள் கோவில் வீதி, சத்யா நகர், வி.க.நகர், பெரியார் நகர், சின்னாய்புதூர் உள்ளிட்ட பகுதிகளில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் காங்கேயம் நகர கழக செயலாளர் வசந்தம் நா. சேமலையப்பன், நகர இளைஞர் அணி அமைப்பாளர், நகர்மன்ற தலைவர் சூரிய பிரகாஷ் உள்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.